# “வன்முறையற்ற சமாதான அணியின் வாகனம் ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று கண்டுபிடித்தமை பற்றிய புதிரும் அவதானமும்”

N.P நிறுவனத்திற்கு சொந்தமான வாகனத்தில் (மூடப்பட்ட பிக்கப் வாகனம்) வெடிக்கக்கூடிய கைக்குண்டு ஒன்று, பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நிறுவன விழுமியங்கள், கொள்கைகளின் படி அனைத்து வன்முறைகளையும் எதிர்க்கும் நிறுவனமாகும். இதன் காரணமாக எந்த யுத்த ஆயுதங்களும் N.P நிறுவன வாகனங்களில் எடுத்துச் செல்வது நிறுவன கொள்கைகளுக்கு விரோதமானதாகும்.

N.P.S.L நிறுவன ஊழியர்கள் தங்கள் வாகனத்தில் ஆயுதங்களை எடுத்துச் செல்ல மாட்டார்கள் என்பது முழுமையானதும் உறுதியானதுமான நம்பிக்கையாகும். ஆகவே எமது வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு நிறுவன ஊழியர்களுக்கு தெரியாமலேயே வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே N.P.S.L நிறுவனமானது ஏனைய அரசசார்பற்ற மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் U.N நிறுவனங்களும் இப்படியான சந்தர்ப்பங்களிற்கு முகம் கொடுக்க நேரிடலாம் என்பதை தெரியப்படுத்துவதோடு இப்படியான சந்தர்ப்பங்களில் அவதானமாக செயல்படுமாறும் கேட்டுக்கொள்கிறோம். அத்தோடு நிறுவன வாகனத்தில் இருந்த கைக்குண்டை காலம் தாழ்த்தாது கைப்பற்றியமைக்காக பாதுகாப்புப் பிரிவினருக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு நிறுவன ஊழியர்களுக்கு எவ்வித உயிர்ச்சேதங்களும் இல்லாமலும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்தமைக்காகவும் எமது வாழ்த்துக்களை N.P.S.L நிறுவனம் சார்பாக தெரிவித்துக் கொள்வதோடு இந்த விடயம் பற்றி முழுமையான பரிசீலினையை செய்வதோடு எமது உள்ளக பாதுகாப்பு பற்றி நடவடிக்கை எடுத்துள்ளதோடு இந்த விடயம் பற்றி பரிசீலனை செய்வதற்கு பூரண ஒத்துழைப்பை கொடுப்பதற்கும் முன்வருகின்றோம் என்பதனையும் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

A 26A Ediriweera Mawatha Dehiwala Sri Lanka
(+94) 11 273 6814 | F 273 6958
E nplanka@nonviolentpeaceforce.org

PDF created with pdfFactory Pro trial version www.pdffactory.com